**வனாத்தவில்லு பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 14 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 11 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 20 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வனாத்தவில்லு பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 03 நடைமுறைக் கணக்குகள் மற்றும் வைப்புக் கணக்குகளுக்காக பிரதான பேரேட்டில் தனித்தனியாக பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இறுதியிருப்பின் பெறுமதி ரூபா 13,282 குறைவாகவும், ரூபா 524 அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஏனைய வருமானம் ரூபா 33,650 வீதி எல்லைக் கட்டணமாகவும், ரூபா 8,700 தொகையானது உடற்பயிற்சி நிலையத்திலும் மற்றும் ரூபா 350 தொகையான ஆயுர்வேத நிலையத்தின் வருமானம் நூலக அங்கத்தவர்களின் கட்டணமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி முறையே ரூபா 15,016,046 ஆகவும், ரூபா 11,820,801 ஆகவும் இருந்ததுடன் அதில் வருடமொன்றிற்கு மேற்பட்ட அந்த மீதிகளின் கூட்டுப்பெறுமதி முறையே ரூபா 3,866,459 மற்றும் ரூபா 5,745,206 ஆகவும் இருந்தன.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 977,574 தொகையான கணக்கு மீதிகளை திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,258,030 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,933,782 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

**செலவினக் கட்டமைப்பு**

மீளாய்வாண்டிற்கான சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையேயான முரண்களுடனும் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவின விடயம் | பாதீடு செய்யப்பட்ட | உள்ளபடியானது | முரண்கள் |
|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** |
| ஆளணி வேதனங்கள் | 19,326 | 24,946 | (5,620) |
| ஏனையவை | 26,190 | 21,639 | 4,551 |
| உபமொத்தம் | 45,516 | 46,585 | (1,069) |
| மூலதனச் செலவினம் | 91,300 | 113,797 | (22,497) |
| மொத்தக் கூட்டுத்தொகை | 136,816 | 160,382 | (23.566) |

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

முன்னைய ஆண்டின் நடைமுறைச் சொத்துக்களுக்கும் நடைமுறைப் பொறுப்புக்களுக்கும் இடையே விகிதாசாரம் 1:35:1 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அது 2:14:1 ஆக இருந்தது. ஆதன் நியம விகிதம் 2:1 ஆகும்.

### 2.4 வருமான நிர்வாகம்

#### 2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

(அ) மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 990 | 894 | 1,118 |
| வாடகை | 28,891 | 28,120 | 1,137 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 308 | 308 | - |
| சேவைகளுக்கான கட்டணம் | 593 | 593 | - |
| பிடியாணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 1,569 | 2,530 | 313 |
| ஏனைய வருமானம் | 3,573 | 2,657 | 4,493 |

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையினால் நிலுவை வருமானம் மற்றும் பட்டியலிடப்பட்ட வருமானம் என்பவற்றின் அறவிடலின் செயல்முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானத் தலைப்பு | 2015.01.01 இல் நிலுவை வருமானம் | நிலுவையில் அறவீடு | ஆண்டில் பற்றுச் பட்டியலிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானத்தில் அறவீடு | 2015.12.31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 1,133 | 485 | 887 | 417 | 1,118 |
| வாடகை | 431 | 18 | 2,876 | 2,152 | 1,137 |
| பிடியாணைக் கட்டணமும் தண்டப் பணமும் | - | - | 1,491 | 1,177 | 313 |
| ஏனைய வருமானம் | 3,594 | 1,467 | 2,368 | - | 4,493 |

### 2.4.2 வீதவரியும் வரியும்

வீதவரி, ஏக்கர் மற்றும் நீர் வரிகளின் மொத்த நிலுவை ரூபா 1,117,831 ஆக இருந்ததுடன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட அந்நிலுவை வரி ரூபா 257,356 ஆக இருந்தது. இவ்வாறு 2015 இன் நீர் வரி அறவிடலின் செயல்முன்னேற்றம் நலிவான நிலையில் காணப்பட்டது.

05 வருடங்களுக்கு மேற்பட்ட வீதவரி மற்றும் ஏக்கர் வரி மீதிகளின் கூட்டுத்தொகை அந்த வரிகளின் மொத்த நிலுவையில் 36 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

### 2.4.3 வாடகை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 287,264 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 10,250 தொகை 03 - 05 வருடங்களுக்கு இடையிலான கால வீச்சிலிருந்து அறவிடப்படாதிருந்தது.

### 2.4.4 கடை வாடகை

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 858,290 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 419,543 தொகை 1 - 3 வருடங்களுக்கிடையிலான காலவீச்சிலிருந்து அறவிடப்படாமல் நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.4.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

முன்னைய ஆண்டின் போது ரூபா 214,440 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது ரூபா 179,560 ஆக இருந்தது.

### 2.4.6 சேவைகளுக்கான கட்டணம்

முன்னைய ஆண்டின் போது ரூபா 575,188 தொகையான சேவைக் கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அது ரூபா 722,103 ஆக இருந்தது.

### 2.4.7 நீதி மன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 313,333 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாரு அறவிடவேண்டியிருந்த ரூபா 4,492,700 தொகையான முத்திரைக் கட்டணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த நிலுவை மீதியில் 1 - 3 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 2,348,869 தொகையும் உள்ளடங்கியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சபையின் நிதியத்தைப் பயன்படுத்தி எந்தவித அபிவிருத்தி வேலையையும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மரணமடைந்த, பணியிடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ஊழியர் கடன் ரூபா 13,758 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2002 சனவரி முதல் 2013 மார்ச் வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் குறித்த திகதியில் உள்ளவாறு செலுத்தாமையினால் ரூபா 43,341 மிகைக் கட்டணமொன்றைச் செலுத்துவதற்கு சபைக்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த மிகைக் கட்டணம் இதுவரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஆம் ஆண்டிற்கான செயல்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

### 3.2 மனித வள முகாமைத்துவத்துவம்

சுபையின் செயலாளர் பதவி, இரண்டாம் தரத்தில் 08 பதவிகள் மற்றும் ஆரம்ப தரத்தில் 02 பதவிகள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் ஆரம்ப தரத்தில் 08 பதவிகளில் 21 பேரும் மற்றும் இரண்டாம் தரத்தில் பதவியொன்றிற்காக ஒருவரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.3.1 விளைவற்ற சொத்துக்கள்

சுபைக்குச் சொந்தமான ரூபா 1,070,000 பெறுமதியான 12 சொத்து விடயங்கள் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத 05 சொத்து விடயங்கள் என்பன பல வருட காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

எந்தவித மதிப்பீடின்றியும் மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக்கு புறம்பாகவும் கங்கேவாடிய சுற்றுலா விடுதி 2015 மார்ச் 01 ஆந் திகதி முதல் மாதமொன்றிற்கு ரூபா 30,100 வீதம் 30 வருடகாலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே சுனாமி ஏற்பட்ட சந்தர்ப்பத்தின் போது சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த 125 குதிரை வலு கொண்டாக பொருத்தப்பட்டிருந்த எந்திரம் மற்றும் பைபர் படகு என்பன 2015 மார்ச் 01 ஆந் திகதி முதல் மாதமொன்றிற்கு ரூபா 15,100 வாடகை அடிப்படையில் மேற்கூறப்பட்ட வாடகையாளருக்கே வாடகைக்கு வழங்குவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருந்தது.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டம்

2012 முதல் 2014 வரை வருடாந்த பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் ரூபா 233,342 கூட்டுப்பெறுமதியான 1516 நூலகப் புத்தகங்கள் காணாமல் போயிருந்தன. 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் படி காணாமல் போயிருந்த புத்தகங்கள் 658 ஆக இருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 104,311 ஆகும். அந்த நட்டம் அதற்குப் பொறுப்பாளர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.6 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

'பிளிசறு' கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தில் மீளாய்வாண்டில் ரூபா 3,875,897 தொகையான நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி சபை ரூபா 3,169,300 தொகையில் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின்போது கிடைக்கப்பெற்ற ரூபா 2,667,713 தொகையான நிதி ஏற்பாடுகளில் ரூபா 2,483,559 பெறுமதியான பட்டியல்கள் தீர்வுசெய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 184,154 தொகை கணக்கில் சேமிக்கப்பட்டிருந்தது. செலுத்துவதற்குள்ள பட்டியல்களின் பெறுமதி ரூபா 563,887 ஆக இருந்ததுடன் அத்தொகையில் முற்பணத்தொகை ரூபா 173,975 இனைத் தீர்த்ததன் பின்னர் செலுத்துவதற்குள்ள பணமான ரூபா 389,912 தொகையினைத் தீர்ப்பதற்கு தேவையான நிதிஏற்பாடு பெறப்படாமையினால் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. பாரியளவிலான தொகையொன்றைச் செலவிட்டு பிரதேசத்தின் கழிவுப்பொருட்களை மீள்சுழற்சி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட இந்த செயற்திட்டத்தில் ஒரு ஊழியர் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதியிலும் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடுசெய்யப்பட்ட மூலதனச் செலவினத்திற்கான நிதிஏற்பாடு ரூபா 91,300,000 ஆக இருந்ததுடன் அதன் உள்ளபடியான செலவினம் ரூபா 113,796,770 ஆனமையால் பாதீட்டு நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 22,496,770 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் முரண்கள் 25 சதவீதமாகும்.

**5.** **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்